முழுப் பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை – 2024

# 44 – இஸ்லாம்

## புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்திற்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக் கொள்ளப்படும் கருத்துக்களுக்கேற்ப இதில் உள்ள சில விடயங்கள் மாற்றப்படலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

| | | |
|---|---|---|
| ඉස්ලාම් I<br>இஸ்லாம் I<br>Islam I | 44 T I | පැය දෙකයි<br>*இரண்டு மணித்தியாலம்*<br>*Two hours* |

**அறிவுறுத்தல்கள்:**

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.

※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி** (X) **இடுவதன்** மூலம் காட்டுக.

**1.** இக்லாஸ் என்ற அறபுச் சொல்லின் கருத்து யாது?
(1) பேணுதல் (2) பணிவு (3) இறையச்சம் (4) தூய எண்ணம் (5) பற்றின்மை

**2.** இஸ்லாமிய வரலாற்றில் ஸஹாபாக்களின் காலம் ஆரம்பமாகும் ஹிஜ்ரி ஆண்டு எது?
(1) ஹிஜ்ரி 06 (2) ஹிஜ்ரி 08 (3) ஹிஜ்ரி 09 (4) ஹிஜ்ரி 11 (5) ஹிஜ்ரி 15

**3.** அல்குர்ஆன் அருளப்படுவதற்கு முன்னர் எதில் பதியப்பட்டிருந்தது?
(1) பைத்துல் இஸ்ஸா
(2) லவ்ஹுல் மஹ்பூழ்
(3) பைத்துல் ம.'.மூர்
(4) சித்ரதுல் முன்தஹா
(5) பைத்துல் முகத்தஸ்

**4.** ஹதீஸ்களை உத்தியோகபூர்வமாக ஒன்றுதிரட்டுவதற்கான முயற்சிகளை ஆரம்பித்து வைத்தவர்
(1) உஸ்மான் (ரழி) அவர்கள்
(2) அலி (ரழி) அவர்கள்
(3) உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள்
(4) அபூஹுரைரா (ரழி) அவர்கள்
(5) இமாம் புகாரி (ரஹ்) அவர்கள்

**5.** ஸஹீஹ் முஸ்லிம் தொகுப்பில் உள்ளடங்கியுள்ள ஹதீஸ்களின் எண்ணிக்கை
(1) 2,000 (2) 4,000 (3) 4,500 (4) 200,000 (5) 300,000

**6.** "ஒரு பெண் நான்கு காரணங்களுக்காகத் திருமணம் முடிக்கப்படுகின்றாள்" என்று வந்துள்ள ஹதீஸில் **உள்ளடங்காத** காரணம் யாது?
(1) செல்வம்
(2) குடும்பம்
(3) கல்வித் தகைமை
(4) மார்க்க உணர்வு
(5) அழகு

**7.** 'ஷீஆ' என்ற சொல்லின் மொழிரீதியான கருத்து யாது?
(1) பிரிந்து சென்றோர்
(2) வெளியேறியோர்
(3) ஆதரவு அணி
(4) கொள்கைவாதிகள்
(5) கருத்துவேறுபாடு கொண்டோர்

**8.** ஒருவரிடம் 300 ஆடுகள் இருந்தால் அவர் கொடுக்க வேண்டிய ஸகாத்தின் அளவு யாது?
(1) 2 ஆடுகள் (2) 3 ஆடுகள் (3) 4 ஆடுகள் (4) 5 ஆடுகள் (5) 6 ஆடுகள்

**9.** அஸ்பாபுந் நுஸூலை அறிந்து கொள்வதற்குரிய இரண்டு வழிகளில் ஒன்று
(1) அஸ்மாஉர் ரிஜால்
(2) நாஸிக் - மன்ஸூக்
(3) முதஷாபிஹாத்
(4) ஸஹீஹான ஹதீஸ்கள்
(5) மதனி சூறாக்கள்

**10.** ஜாஹிலிய்யாக் காலத்தில் க.'.பாவைத் தரிசிப்பதற்காக வரும் யாத்திரீகர்களின் வசதிக்காக செய்யப்பட்டிருந்த 'நீர் வழங்குதல்' எப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டது?
(1) ரிபாதா (2) ஸிகாயா (3) ஹிஜாபா (4) லிவா (5) நத்வா

**11.** ஆரம்ப காலந்தொட்டு இலங்கை முஸ்லிம்கள் பல்வேறு அரசியல் பங்களிப்புக்களை வழங்கியுள்ளனர். இவ்வகையில், குருநாகலை இராசதானியின் மன்னனாக முடிசூடப்பட்டவர்
(1) மடிகேபத்த - ஷேஹ் ஆலிம் (2) வத்ஹிமி - கலேபண்டார அவ்லியா
(3) ஷேஹ் அப்துல் காதர் (4) உஸ்மா லெப்பை
(5) கோபால முதலிகே அன்சார்

**12.** முஜ்தஹிதுகளில் மிக உயர்ந்த தரத்தில் உள்ளவர் யார்?
(1) முஜ்தஹித் முன்தஸிப் (2) முஜ்தஹித் பில் மத்ஹப்
(3) முஜ்தஹித் பில் பத்வா (4) முஜ்தஹித் தர்ஜீஹ்
(5) முஜ்தஹித் முத்லக்

**13.** ஹாஜிகள் ஹஜ்ஜை நிறைவேற்ற வேண்டிய கடமையான நாட்கள்
(1) துல் ஹஜ் பிறை 1 - 10 வரை (2) துல் ஹஜ் பிறை 8 - 13 வரை
(3) துல் ஹஜ் பிறை 13 - 15 வரை (4) துல் ஹஜ் பிறை 14 - 17 வரை
(5) துல் ஹஜ் பிறை 18 - 21 வரை

**14.** "கழுகு, காகம், பருந்து போன்ற வேட்டைப் பறவைகள் நீர் அருந்தியதன் பின் எஞ்சுகின்ற நீர் சுத்தமானது" என்று தீர்வு பெறப்பட்ட இஸ்லாமிய சட்ட மூலாதாரம்
(1) உர்பு ஆம் (2) இஜ்மாஉ சுகூத்தி (3) இஸ்திஹ்ஸான்
(4) கௌலுஸ் ஸஹாபி (5) கியாஸுல் அத்னா

**15.** இலங்கையின் இரத்தினக் கற்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள 'கிதாபுல் ஜமாஹிர் பீ ம.்.ரிபதில் ஜவாஹிர்' என்ற நூலின் ஆசிரியர்
(1) அல் பலாதூரி (2) இப்னு பதூதா (3) ய.்.கூபி (4) அல் பெருனி (5) இப்னு ஜரீர்

**16.** இஸ்லாமியப் பொருளாதாரத்தின் சிறப்பம்சங்களுள், நெகிழும் தன்மை கொண்ட விதிகளுள் **உள்ளடங்காதது**
(1) அல்லாஹ் விதித்த சட்டங்களுக்கமைய அனைத்து வளங்களையும் பயன்படுத்துதல்
(2) சமகாலப் பொருளாதார நிலைமைகளுக்கேற்ப பொருளாதாரத் திட்டங்களை மேற்கொள்ளல்
(3) பொருளாதார நிறுவனங்களை பொதுவுடைமையாகவோ தனியுடைமையாகவோ மாற்றுதல்
(4) அரச மற்றும் தனியார் நிறுவன ஊழியர்களின் வேதனங்கள் தொடர்பாக தீர்மானமெடுத்தல்
(5) பொருளாதார நடவடிக்கைகளில் அரச தலையீட்டின் அளவைத் தீர்மானித்தல்

**17.** முதலாம் அகபா உடன்படிக்கையைத் தொடர்ந்து நபி (ஸல்) அவர்களின் தூதுவராக மதீனாவிற்குச் சென்ற ஸஹாபி யார்?
(1) முஸ்அப் இப்னு உமைர் (ரழி)
(2) தல்ஹா இப்னு சுபைர் (ரழி)
(3) ஸைத் இப்னு ஸாபித் (ரழி)
(4) அப்துல்லாஹ் இப்னு உம்மி மக்தூம் (ரழி)
(5) ஜ.்.பர் இப்னு அபீ தாலிப் (ரழி)

**18.** அல்குர்ஆன் மனித குலத்திற்கு அருளப்பட்டதன் நோக்கங்களில் உள்ளடங்காதது
(1) வாழ்க்கையில் இறை வழிகாட்டலைப் பெற்றுக்கொள்ளுதல்
(2) அல்லாஹ்வின் அன்பையும் நெருக்கத்தையும் பெற்றுக்கொள்ளுதல்
(3) அதனை ஓதுவதன் மூலம் ஜீவனோபாயத்தைப் பெற்றுக்கொள்ளுதல்
(4) அறிவுடையோர் அதன் மூலம் நல்லுணர்ச்சி பெறுதல்
(5) அதன் வசனங்களைக் கவனித்து ஆராய்தல்

**19.** குலபாஉர் ராஷிதூன்களின் இறுதி இரு கலீபாக்களின் காலங்களில் உள்நாட்டுக் குழப்பங்கள் தோன்றவும் முஸ்லிம்களுக்கிடையில் பிளவுகள் உருவாகவும் காரணமாக இருந்த முனாபிக்
(1) அப்துல்லாஹ் இப்னு உரைகத் (2) அஸ்வதுல் அன்ஸீ
(3) அபூ லஹப் (4) அப்துல்லாஹ் இப்னு ஸப.்.
(5) அபூ சுப்யான்

**20.** மகாஸிதுஷ் ஷரீஆவின் 'மகாஸித்' என்ற சொல்லுக்கான கருத்துக்களில் உள்ளடங்காதது
(1) இலக்கு (2) நல்லெண்ணம் (3) அடைவு
(4) நோக்கம் (5) எதிர்பார்க்கும் விடயம்

**21.** கி.பி. 1626 ஆம் ஆண்டு போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தின் கீழிருந்த எல்லாப் பிரதேசங்களிலிருந்தும் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட போது, கண்டியின் உட்புறங்களிலும், மட்டக்களப்பிலும் அவர்களைக் குடியமர்த்திய மன்னன் யார்?
(1) இரண்டாம் புவனேகபாகு
(2) பராக்கிரமபாகு
(3) முதலாம் இராஜசிங்கன்
(4) மாணவம்மன்
(5) செனரத்

**22.** பின்வருவனவற்றுள் இஸ்லாமிய பொருளியல் கோட்பாட்டுக்கு **முரணான** கூற்று எது?
(1) தனிநபர் சொத்தில் சமூகத்துக்கும் பங்குண்டு.
(2) செல்வம் தொடர்பாக மனிதன் மறுமையில் விசாரிக்கப்படுவான்.
(3) அனைத்து வளங்களையும் அல்லாஹ் மனிதனுக்காகப் படைத்துள்ளான்.
(4) செல்வம் மனிதனுக்கு சோதனையாகும்.
(5) செல்வம் மனித முயற்சியின்றி இறையருளால் மட்டும் கிடைக்கின்றது.

**23.** மத்திய ஆசியாவில் ஆத்மீக ரீதியான பலத்தை வழங்கிய நக்ஷபந்தியா தரீக்காவின் ஸ்தாபகர்
(1) ஸைய்யத் அஹ்மத் ஷரீப்
(2) அபூ ஹாஷிம்
(3) இப்னு அரபி
(4) காதி முஹம்மத்
(5) அபூ ஹாமித் அல் கஸ்ஸாலி

**24.** இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் வர்த்தகம் தொடர்பான சட்டதிட்டங்களை வகுத்துள்ளனர். அவற்றுள் 'ஸலம்' என்பது
(1) கூட்டுப்பங்குடமை
(2) அடகு வைத்தல்
(3) வாடகைக்குப் பெறல்
(4) முற்பணக் கொடுப்பனவு வியாபாரம்
(5) பிற்போடப்பட்ட கொடுப்பனவு வியாபாரம்

**25.** இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலப்பிரிவில் தமது கலாசார அடையாளமாக இருந்த துருக்கித் தொப்பியை நீதிமன்றத்தில் அணிய அனுமதி வேண்டிப் போராடியவர்
(1) எம். ஸி. சித்திலெப்பை
(2) பெரியதம்பி மரைக்கார்
(3) எம். ஸி. அப்துல் காதர்
(4) வாப்பிச்சி மரைக்கார்
(5) சேர் ராஸிக் பரீத்

**26.** பின்வருவனவற்றுள் இஜ்திஹாத் பற்றிய **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) இஜ்திஹாத் என்ற பதம் மொழியடிப்படையில் முழு முயற்சியைப் பிரயோகித்தலைக் குறிக்கும்.
(2) அல்குர்ஆன் அல்லது ஹதீஸ் திட்டவட்டமாக கருத்துத் தெரிவித்துள்ள இடங்களிலும் இஜ்திஹாத இடம்பெறமுடியும்.
(3) எல்லா மத்ஹபுகளும் இஜ்திஹாதை அங்கீகரித்துள்ளதோடு அதனைப் பிரயோகித்துமுள்ளன.
(4) தீர்வு சொல்லப்படாத புதிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை முன்வைக்க இஜ்திஹாத் அவசியமாகும்.
(5) ஷரீஆவின் ஆதாரங்களுள் அநேகமானவை பல கருத்துக்களுக்கு இடம்பாடானவை. அவற்றுள் மிகப் பொருத்தமான ஒரு கருத்தைத் தெரிவுசெய்ய இஜ்திஹாத் அவசியமாகும்.

**27.** நபி (ஸல்) அவர்கள் தமது அரச நிருவாகத்தில் இராஜ தந்திரம், உடன்படிக்கைகள் மற்றும் வெளிநாட்டு விவகாரங்கள் என்ற ஒவ்வொரு துறைக்கும் நியமித்திருந்த நபித் தோழர்களின் பெயர்கள் முறையே
(1) அலி (ரழி), முஆவியா (ரழி), உபைதா (ரழி)
(2) உபைதா (ரழி), அலி (ரழி), முஆவியா (ரழி)
(3) முஆவியா (ரழி), உபைதா (ரழி), அலி (ரழி)
(4) அலி (ரழி), உபைதா (ரழி), முஆவியா (ரழி)
(5) உபைதா (ரழி), முஆவியா (ரழி), அலி (ரழி)

**28.** இஸ்லாமிய வங்கி தனது இலக்குகளை அடைந்து கொள்வதற்கான அடிப்படைகளுள் **உள்ளடங்காதது**
(1) பொருளாதார அபிவிருத்தியோடு சமூக அபிவிருத்தியைத் தொடர்புபடுத்தல்
(2) வட்டியுடனான செயற்பாடுகளை முற்றாகத் தவிர்த்தல்
(3) வங்கிச் செயற்பாடுகளில் இஸ்லாமிய ஷரீஆ சட்டங்களைப் பேணல்
(4) பாரம்பரிய வங்கி முறைமைகளை முழுமையாக அமுல்படுத்தல்
(5) சமூக ஐக்கியத்துக்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் பங்களித்தல்

**29.** பிரயாணத்தின்போது தண்ணீர் கிடைக்காமையினால் தயம்மும் செய்து தொழுது, பின்னர் தண்ணீர் கிடைத்ததும் வுழூ செய்து அத்தொழுகையை மீட்டித் தொழுதவரைப் பார்த்து நபி (ஸல்) அவர்கள்

(1) "நீர் ஸுன்னாவின் படியே நடந்து கொண்டீர்" என்றார்கள்.
(2) "உமக்கு இரண்டு முறை கூலி உண்டு" என்றார்கள்.
(3) "உமது தொழுகை நிறைவேறிவிட்டது" என்றார்கள்.
(4) "மார்க்க விடயத்தில் நீர் வரம்புமீறி நடந்துகொள்ள வேண்டாம்" என்றார்கள்.
(5) "எதிலும் நீர் நடுநிலைமையைக் கடைப்பிடிப்பீராக" என்றார்கள்.

**30.** பின்வருவனவற்றுள் ஹுகூகுல் இபாத் தொடர்பான **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.

(1) வெள்ளம், புயல், பூகம்பம் போன்ற அனர்த்தங்களின்போது சமூக நலப்பணிகளில் ஈடுபடுவது முக்கியமானதாகும்.
(2) மனிதன் தன்னைச் சூழவுள்ள பௌதீக வளங்களை முறையாகப் பயன்படுத்தவும் பாதுகாக்கவும் கடமைப்பட்டுள்ளான்.
(3) மனிதன் தனது ஆரோக்கியத்தைப் பேணும் வகையில் நோய்கள் வரும்போது பொருத்தமான சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வது கடமையாகும்.
(4) உறவினர்கள், அயலவர்களுடன் அன்பாகப் பழகுவது, தேவையின்போது உதவுவது, துன்பத்தில் பங்கேற்பது என்பன முக்கிய கடமைக் கூறுகளில் உள்ளவையாகும்.
(5) தனது குடும்ப உறுப்பினர்களின் நலனுக்காக உடல், உள்ளத்திற்கு ஓய்வு வழங்காது உழைப்பது குடும்பத் தலைவனது கடமையாகும்.

**31.** ஷீஆக்களிடம் தோற்றம் பெற்ற 'இஸ்மத்' கோட்பாடு பின்வருவனவற்றுள் எதனைக் குறிக்கின்றது?

(1) ஹுஸைன் (ரழி) அவர்களின் அடக்கஸ்தலத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நோய் நிவாரணம் தரும் மண்ணை
(2) நபிமார்களைப் போன்று இமாம்களும் பாவங்கள், தவறுகள் செய்வதிலிருந்து விலக்களிக்கப்பட்ட நிலையை
(3) பெரும்பாவம் செய்தவன் முஃமினுக்கும் இறை நிராகரிப்பாளனுக்கும் இடைநிலையில் இருப்பான் என்பதை
(4) தான் செய்த பெரும் பாவங்களுக்கு தவ்பா செய்யாத நிலையில் மரணித்தால் அவன் நிரந்தரமாக நரகில் இருப்பான் என்பதை
(5) குறிக்கப்பட்ட சில நிபந்தனைகளின் அடிப்படையில் செய்து கொள்ளப்படுகின்ற தற்காலிகத் திருமணத்தை

**32.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - கருத்தொற்றுமையான விவகாரங்களில் பரஸ்பரம் ஒத்துழைத்தல்
B - விவாதங்களே தீர்வுக்கான வழியாக அமைதல்
C - கருத்து வேறுபாடு கொண்ட விடயங்களில் விட்டுக் கொடுத்தல்
D - ஒரு மத்ஹபின் அல்லது தனிமனிதனின் கருத்துக்களில் உறுதியாக இருத்தல்
E - ஒருவரையொருவர் சாடாது, மதித்து நடத்தல்
F - அடுத்தவர் பற்றிய நல்லெண்ணத்தை வளர்த்துக் கொள்ளல்

மேற்குறிப்பிட்டவற்றுள் கருத்து வேறுபாடுகளின்போது பேணவேண்டிய ஒழுக்கங்கள் சம்பந்தமான இஸ்லாத்தின் வழிகாட்டல்களை மாத்திரம் உள்ளடக்கிய கூற்றுகள் யாவை?

(1) A, B, C, D (2) A, B, C, E (3) A, C, E, F (4) B, C, D, E (5) B, D, E, F

**33.** மனித உரிமைகள் தொடர்பான சில கூற்றுகள் பின்வருமாறு.

A - 1948 இல் ஐ.நா. சபை வெளியிட்ட மனித உரிமைப் பிரகடனம் மதீனா சாசனத்தினூடாக வழங்கப்பட்ட மனித உரிமைகள் பற்றிய தொகுதிகளையும் உள்ளடக்கியிருந்தது.
B - இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமைகள் தெய்வீகத் தன்மை கொண்டவையாகும்.
C - அநீதிக்கெதிராகப் போராடுதல் மனித உரிமையாகக் கொள்ளப்படுவதில்லை.
D - கற்பைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை பெண்களுக்கு மட்டும் உரியதாகும்.
E - மனித கௌரவத்தைப் பாதுகாப்பதும் மனித உரிமைகளுள் ஒன்றாகும்.

மேற்குறிப்பிட்டவற்றுள் இஸ்லாம் வழங்கும் மனித உரிமைகள் தொடர்பான கருத்துக்களை மாத்திரம் உள்ளடக்கிய விடைத்தொகுதி

(1) A, B, C (2) A, B, E (3) B, C, D (4) B, C, E (5) C, D, E

**34.** ஹிஜ்ரத்தின் பின்னர் நபி (ஸல்) அவர்கள் முஹாஜிரீன்களுக்கும் அன்சாரீன்களுக்கும் இடையில் ஏற்படுத்திய சகோதரத்துவ அமைப்பில் அபூபக்ர் (ரழி) அவர்களின் சகோதரராக விளங்கியவர்

(1) அனஸ் பின் மாலிக் (ரழி) (2) காரிஜா பின் ஸைத் (ரழி)
(3) அபூ அய்யூப் அல் அன்சாரி (ரழி) (4) ஸஃத் இப்னு முஆத் (ரழி)
(5) அஸ்அத் பின் சுராரா (ரழி)

**35.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - பண்புகளையுடைய பொருட்களுக்கு வெளியுருவம் உண்டு என்பது மனிதனால் புரிந்து கொள்ளப்படத்தக்கவையாகும்.
B - அல்லாஹ்வுக்கு தாத்தும் ஸிபத்துக்களும் உள்ளதாக அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.
C - பௌதீக நியதிகளுக்கு அப்பாற்பட்ட அல்லாஹ்வின் தாத்தை மனிதனால் உணரவோ கற்பனை செய்யவோ முடியாது.
D - அல்லாஹ்வின் தாத் பற்றிச் சிந்திப்பதைத் தவிர்த்து அவனது பிரபஞ்சப் படைப்புக்கள் பற்றிச் சிந்திக்க இஸ்லாம் மனிதனைத் தூண்டுகிறது.
E - அல்லாஹ் அர்ஷில் இருக்கிறான் என்பதற்கு மேலதிக விளக்கங்கள் கூறுவதையும் அதனைக் கற்பனை செய்வதையும் இஸ்லாமிய அறிஞர்கள் அனுமதித்துள்ளனர்.

மேலுள்ளவற்றுள் அல்லாஹ்வின் தாத் பற்றி இஸ்லாம் குறிப்பிட்டுள்ள சரியான விளக்கங்களை உள்ளடக்கிய விடையைத் தெரிவுசெய்க.

(1) A, B, C (2) A, B, D (3) A, B, E (4) B, C, D (5) B, D, E

**36.** பின்வரும் கூற்றுகளை அவதானிக்குக.

A - இஸ்லாம் தனிமனித செல்வாக்குகள் இன்றி, வஹி மூலம் பெறப்பட்ட அறிவைக் கொண்டு உருவானதாகும்.
B - மனித முயற்சியால் தோன்றிய சமயங்கள் பெரும்பாலும் ஆன்மீகக் கருத்துக்களைத் தழுவியவையாகும்.
C - தனிநபர்களை மட்டுமன்றி முழுச் சமூகத்தையும் நெறிப்படுத்தி வழிகாட்டும் மார்க்கமே இஸ்லாமாகும்.
D - பூமியை வளப்படுத்தும் பணியில் ஈடுபடுமாறு மனிதனை இஸ்லாம் பணிக்கிறது.
E - இஸ்லாம் எல்லாக் காலத்துக்கும் எல்லாப் பிரதேசங்களுக்கும் பொருந்தக்கூடிய பொதுவான ஒரு மார்க்கமாகும்.

மேலுள்ளவற்றுள் இஸ்லாத்தின் சிறப்பம்சங்களைச் சுட்டும் மிகப் பொருத்தமான கூற்றுகளை மாத்திரம் உள்ளடக்கிய விடைத்தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A, B, C (2) A, B, D (3) A, C, E (4) B, C, D (5) B, C, E

**37.** வரலாற்றுக்கு உட்பட்ட கால இலங்கையில் வந்து குடியேறிய பிரதான இனக்குழுக்கள்

(1) போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்
(2) ஆரியர், ரோமர், அறேபியர்
(3) ஆரியர், திராவிடர், அறேபியர்
(4) பாரசீகர், ஆரியர், ஒல்லாந்தர்
(5) கிரேக்கர், ரோமர், பாரசீகர்

**38.** பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்க.

A - வியாபாரத்தில் நேர்மையைக் கடைப்பிடித்தல்
B - பொது வேலைகளுக்காக சொத்துக்களை முழுமையாக வஸிய்யத் செய்தல்
C - இன, மத வேறுபாடின்றி நம்பிக்கை, நாணயமாக நடத்தல்
D - ஸகாத்தை வழங்கி, அரசுக்கான வரியைத் தவிர்த்தல்
E - ஏனையவர்களின் உரிமைகளைப் பேணுதல்

மேலுள்ளவற்றுள் அன்றாட கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளின்போது பேண வேண்டிய ஒழுக்க விழுமியங்களை உள்ளடக்கிய விடைத்தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A, B, C (2) A, B, E (3) A, C, E (4) B, D, E (5) C, D, E

M.N. THARIK MOHAMED.B.A.(NALEEMI)
ASST. PRINCIPAL
P/ Nuraicholai National School
Kalpity Road, Nuraicholai.

**39.** பின்வருவனவற்றைக் கருத்திற் கொள்க.

A - மனைவியின் தாய், மனைவியின் சகோதரி

B - பெரிய தாயின் மகள், சிறிய தாயின் மகள்

C - தாய் மாமாவின் மகள்

D - சகோதரனின் மகள், சகோதரியின் மகள்

E - பெரிய தந்தையின் மகள், சிறிய தந்தையின் மகள்

மேலுள்ளவற்றுள் இஸ்லாத்திற்கு அமைய ஆண் ஒருவர் திருமணம் முடிக்க அனுமதிக்கப்பட்டோரை உள்ளடக்கிய விடைத்தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A, B, C (2) A, B, E (3) B, C, D (4) B, C, E (5) C, D, E

**40.** பின்வரும் அட்டவணையில் A முதல் I வரையுள்ள தகவல்களைக் கவனத்திற் கொள்க.

| | | |
|---|---|---|
| A - அஹ்லுஸ் ஸுன்னா | B - முஷ்ரிக் | C - இமாம் ஜஃபர் ஸாதிக் |
| D - முல்ஹித் | E - ஸலபுஸ் ஸாலிஹீன் | F - ஜஹ்மிய்யா |
| G - நுஸைரி | H - முஅத்திலா | I - அப்துல் காதிர் ஜீலானி |

மேலுள்ளவற்றுள் இஸ்லாமிய அகீதாவுக்கு முரண்பட்ட தரப்பினரை மாத்திரம் குறிக்கும் விடைத்தொகுதி

(1) A, B, C, D, E (2) A, B, D, E, F (3) B, D, E, F, I
(4) B, D, F, G, H (5) C, E, F, H, I

**41.** பின்வரும் அட்டவணையிலுள்ள செயற்பாடுகளைக் கவனத்திற் கொள்க.

| | | |
|---|---|---|
| A - அல்லாஹ்வுக்கு இணை கற்பித்தல் | B - அல்லாஹ் அல்லாதவற்றின் மீது சத்தியம் செய்தல் | C - சூரியனை வணங்குதல் |
| D - அல்லாஹ் அல்லாதவற்றுக்காகப் பலியிடுதல் | E - சூனியம் செய்தல் | F - வசியம் செய்தல் |
| G - சகுனம் பார்த்தல் | H - மந்திரித்தல் | I - மனிதனைக் கடவுளாக ஏற்றல் |

மேலுள்ளவற்றுள் ஷிர்குல் அஸ்கர் உடன் தொடர்பானவைகளை மாத்திரம் உள்ளடக்கிய விடைத்தொகுதி

(1) A, B, C, D, E, F (2) A, C, D, E, F, G (3) B, C, D, E, F, G
(4) B, D, E, F, G, H (5) B, E, F, G, H, I

● **42** முதல் **45** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் **X, Y** எனும் நிரல்களின் கீழ் சில தகவல்கள் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் உள்ளவை **X** நிரலில் உள்ளவற்றுடன் ஏதேனும் ஒருவகையில் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை. எனினும் அவை ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன. அதன்படி **X** நிரலுக்கேற்ப **Y** நிரலிலுள்ள விடயங்களைப் பொருத்தமான வகையில் தொடர்புபடுத்தும்போது ஒழுங்குமுறையில் அமையும் சரியான விடையைத் தெரிவுசெய்க.

**42.**

| X | Y |
|---|---|
| (i) ஷபாஅத் | A - கலந்தாலோசனை |
| (ii) வலி | B - நபித் தோழர் |
| (iii) ஷூரா | C - இறைநேசர் |
| (iv) ரூஹ் | D - நபி (ஸல்) அவர்களது பள்ளிவாசல் |
| (v) மஸ்ஜிதுன் நபவி | E - உடலமைப்பில்லாத ஆன்மா |
| | F - பரிந்துரை |

(1) A, B, C, D, F (2) B, C, E, D, A (3) C, E, F, B, D
(4) E, D, A, C, B (5) F, C, A, E, D

43.

| X | Y |
|---|---|
| (i) நுபுவ்வத் | A - தெரிவுசெய்யப்பட்ட சில நபிமார்களுக்கு அல்லாஹ்வால் வழங்கப்பட்ட தூதுத்துவம் |
| (ii) ரிஸாலத் | B - நேரடியாக அல்லது மலக்கின் ஊடாக செய்திகளைப் பரிவர்த்தனை செய்ய தெரிவுசெய்யப்பட்ட ஒருவரின் பதவி |
| (iii) ஹிதாயத் | C - நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு கொள்வதனை குறிக்கும் சொல் |
| (iv) மஹப்பதுர் ரசூல் | D - உலக வாழ்க்கைக்குப் பின் ஏற்படும் முடிவில்லா மற்றொரு வாழ்க்கை |
| (v) மஆத் | E - ஈருலகிலும் மனிதன் வெற்றியடையக் கூடிய பாதைக்கான வழிகாட்டல் |

(1) A, B, C, D, E (2) A, B, D, E, C (3) A, B, E, D, C
(4) B, A, E, C, D (5) B, A, D, C, E

44.

| X | Y |
|---|---|
| (i) இஜ்மாஉ ஸரீஹ் | A - பொருட்களை கடனுக்கு வாங்கும்போது சாட்சிகளை வைத்துக் கொள்வதற்குப் பதிலாக புத்தகம் ஒன்றில் பதிந்து வைத்தல் |
| (ii) கியாஸுல் அவ்லா | B - அபூபக்ர் (ரழி) அவர்கள் ஆட்சித் தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்படல் |
| (iii) இஸ்திஸ்ஹாப் | C - பெற்றோரைச் சாட்டையால் அடித்துத் துன்புறுத்துதல் |
| (iv) மஸ்லஹா முர்ஸலா | D - அல்குர்ஆன் ஒன்று திரட்டப்பட்டு நூலுருப்படுத்தப்படல் |
| (v) உர்பு காஸ் | E - மதுபானம், வினாகிரியாக மாறும்வரை ஹராமானதாகும். |

(1) A, B, C, D, E (2) A, B, D, E, C (3) B, C, D, A, E
(4) B, C, E, D, A (5) C, D, E, B, A

45.

| X | Y |
|---|---|
| (i) பஸ்கு | A - ஒருவன் தனது மனைவியை உடல்ரீதியாக தனது தாய்க்கு ஒப்பிட்டுக் கூறுதல் |
| (ii) தலாக் | B - ஒருவன் தனது மனைவியோடு உடலுறவு கொள்வதில்லை என சத்தியம் செய்தல் |
| (iii) குல்உ | C - ஒருவன் தனது மனைவி மீது விபச்சாரக் குற்றம் சுமத்துதல் |
| (iv) ளிஹார் | D - ஒரு பெண் தனது கணவனுடன் இணைந்து வாழ முடியாத நிலையில் விவாக பந்தத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளல் |
| (v) ஈலாஉ | E - விவாக ஒப்பந்தத்தில் ஒரு கோளாறு ஏற்படுதல் |
| | F - ஓர் ஆண் தனது மனைவியை விவாகரத்துச் செய்தல் |

(1) A, B, C, D, E (2) B, C, D, E, A (3) C, D, E, A, B
(4) D, E, A, B, C (5) E, F, D, A, B

- **46** தொடக்கம் **50** வரையிலான வினாக்களில் இரண்டு வகையிலான கூற்றுகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள சோடிக்கூற்றுகளுக்குப் பின்வரும் (1), (2), (3), (4), (5) என்பவற்றில் மிகப் பொருத்தமானதைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தைக் குறிப்பிடுக.

| இல. | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | பிழையானது | சரியானது |
| (3) | சரியானது | பிழையானது |
| (4) | பிழையானது | பிழையானது |
| (5) | சரியானது | சரியாக இருப்பதுடன் முதலாம் கூற்றை மேலும் விபரிக்கின்றது |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **46.** | நபி (ஸல்) அவர்கள் திருமணத்தின் பின்பு இரண்டு 'முத்' அளவு வலீமா விருந்து கொடுத்தார்கள். | திருமண விருந்துபசாரத்துக்கு (வலீமா) அழைக்கப்பட்டால் அதற்குப் பதிலளிப்பது கடமையல்ல. |
| **47.** | வயிற்றுப் பசிக்காகத் திருடியிருந்த போதிலும், திருட்டுச் செயலைச் செய்தவனுக்குரிய தண்டனை வழங்கப்படும். | குற்றங்கள் நிகழ்வதைத் தடுக்கக் கூடிய ஒரு சூழல் உருவாக்கப்பட்டதன் பின்னரே குற்றங்களுக்கான இஸ்லாமியத் தண்டனைகள் அமுல்படுத்தப்படும். |
| **48.** | நன்மையை ஏவி, தீமையைத் தடுக்கும் பணியில் ஈடுபடுவோர் அப்பணியின் முறைமை, சட்ட திட்டங்கள் என்பவற்றைப் புரிந்து அதில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். | பிக்ஹுத் த.்வா என்பது இறைவழிகாட்டலைப் புரிந்து கொள்ளாத சமூகத்தாரிடையேயும், தீமைகள் நிறைந்த முஸ்லிம் சமூகத்தினரிடையேயும், அழைப்புப் பணியை மேற்கொள்ளும் ஒரு முறைமையாகும். மேலும், அதன் ஒழுங்குகளை ஒரு முஸ்லிமுக்குக் கற்றுக் கொடுக்கக் கூடிய ஒரு கலையுமாகும். |
| **49.** | இஸ்லாமிய சமூக அமைப்பு அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் வழிகாட்டுதலினால் கட்டியெழுப்பப்பட்டுள்ளமை அதன் தனிச்சிறப்பாகும். | தொழில் வழங்குதல், சமமான சந்தர்ப்பங்களை வழங்குதல், வறுமையுற்றோருக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற விடயங்களில் இஸ்லாம் நீதியை வலியுறுத்துகின்றது. |
| **50.** | கி.பி. 9, 10 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையின் கரையோரங்களில் முஸ்லிம் குடியிருப்புகள் காணப்பட்டமையை தொல்லியற் சான்றுகள் எதுவும் உறுதிப்படுத்தவில்லை. | கி.பி. 13 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியிலும் கூட முஸ்லிம்கள் இலங்கையின் அரசியலில் செல்வாக்குச் செலுத்துமளவுக்கு வளர்ந்திருக்கவில்லை. |

※ ※ ※

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2024

විෂය අංකය / பாட இலக்கம்: **44**

විෂයය / பாடம்: **இஸ்லாம்**

ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 11. | 2 | 21. | 5 | 31. | 2 | 41. | 4 |
| 02. | 4 | 12. | 5 | 22. | 5 | 32. | 3 | 42. | 5 |
| 03. | 2 | 13. | 2 | 23. | 4 | 33. | 2 | 43. | 4 |
| 04. | 3 | 14. | 3 | 24. | 4 | 34. | 2 | 44. | 4 |
| 05. | 2 | 15. | 4 | 25. | 3 | 35. | 4 | 45. | 5 |
| 06. | 3 | 16. | 1 | 26. | 2 | 36. | 3 | 46. | 3 |
| 07. | 3 | 17. | 1 | 27. | 2 | 37. | 3 | 47. | 2 |
| 08. | 2 | 18. | 3 | 28. | 4 | 38. | 3 | 48. | 5 |
| 09. | 4 | 19. | 4 | 29. | 2 | 39. | 4 | 49. | 1 |
| 10. | 2 | 20. | 2 | 30. | 5 | 40. | 4 | 50. | 4 |

- විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் $1 \times 50 = 50$

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

ඉස්ලාම් II
இஸ்லாம் II
Islam II

44 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

※ **பகுதி I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் **பகுதி II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) 'தௌபா' என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) 'தௌபா' செய்யும்போது பேணப்பட வேண்டிய நிபந்தனைகளுள் **நான்கைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) ஈமான், அமல், அக்லாக் என்பவற்றுக்கிடையிலான தொடர்புகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) ஆன்மீக மேம்பாட்டுக்குத் தடையாகவுள்ள அம்சங்கள் **நான்கைக்** குறிப்பிட்டு, விளக்குக. (08 புள்ளிகள்)

**2.** (i) மௌழூஆன ஹதீஸை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

(ii) மக்பூலான ஹதீஸ் மற்றும் மர்தூதான ஹதீஸ் என்பவற்றை வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(iii) மௌழூஆன ஹதீஸ்கள் தோன்றியமைக்கான காரணங்கள் **மூன்றினை** உதாரணங்களுடன் விபரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) இஜ்மாஉ ஒரு சட்ட மூலாதாரம் என்பதனை அல்குர்ஆன், ஸுன்னா ஆதாரங்களினூடாக நிறுவுக. (08 புள்ளிகள்)

**3.** (i) உணவு உட்கொள்வதற்கான இஸ்லாத்தின் நோக்கங்களில் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) ஆடை அணிதல் தொடர்பான இஸ்லாத்தின் நோக்கங்களை எழுதி, அவை தொடர்பான ஒரு ஹதீஸ் ஆதாரத்தைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) உண்பதற்கு தடுக்கப்பட்ட மாமிச உணவோடு தொடர்பான இஸ்லாமிய வழிகாட்டல்களைத் தருக. (06 புள்ளிகள்)

(iv) இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் திருமணத்தின் நோக்கங்கள் **நான்கைக்** குறிப்பிட்டு விளக்குக. (08 புள்ளிகள்)

## பகுதி II

**4.** (i) சமூக முன்னேற்றத்திற்கு மஸ்ஜிதுகள் ஆற்ற வேண்டிய பணிகளை அடையாளப்படுத்தி விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) மறுமை வாழ்வு அவசியம் என்பதற்கான நியாயங்களைத் தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

**5.** (i) சொல்லப்படும் முறை, சந்தர்ப்பம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்படும் தலாக்கின் இரு வகைகளையும் விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) இஸ்லாத்தில் குறிப்பிட்டுள்ளபடி பிள்ளைகள் பெற்றோருக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை விபரிக்குக. (10 புள்ளிகள்)

**6.** (i) இஸ்லாமிய சட்டவாக்க வரலாற்றில் 'இஜ்திஹாதின் வாயில் மூடப்பட்டுவிட்டது' என்ற சிந்தனையால் ஏற்பட்ட விளைவுகளை ஆராய்க. (10 புள்ளிகள்)

(ii) அல்குர்ஆனின் மொழிரீதியான மற்றும் விஞ்ஞானரீதியான அற்புதங்களை நுணுக்கமாக ஆராய்க. (10 புள்ளிகள்)

**7.** (i) குற்றங்களுக்கு எதிராக இஸ்லாம் நிர்ணயித்துள்ள தண்டனைகளுக்கான நியாயங்களை முன்வைக்குக. (10 புள்ளிகள்)

(ii) போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் சமூக - பொருளாதார பாதிப்புகளைக் குறிப்பிட்டு, இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்கான உமது ஆலோசனைகளை முன்வைக்குக. (10 புள்ளிகள்)

**8.** பின்வருவன பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) அல்குர்ஆன் சிறிது சிறிதாக அருளப்பட்டமைக்கான காரணங்கள் (05 புள்ளிகள்)

(ii) இஸ்லாத்தில் கைத்தொழிலின் முக்கியத்துவம் (05 புள்ளிகள்)

(iii) இலங்கையில் இஸ்லாத்தின் அறிமுகம் (05 புள்ளிகள்)

(iv) ஹஜ்ஜின் லௌகீகப் பயன்கள் (05 புள்ளிகள்)

* * *

## பகுதி 1

**1. (i) 'தௌபா' என்றால் என்ன? (02 புள்ளிகள்)**

பாவமன்னிப்பு என்று மட்டும் கூறினால் (1புள்ளி).

- 'தௌபா' என்ற சொல் திரும்புதல், மீளுதல் போன்ற கருத்துக்களைத் தருகின்றன.
- இஸ்லாமிய வழக்கில் 'பாவமன்னிப்பை' (பாவமீட்சியை)க் குறிக்கவே இச்சொல் பயன்படுத்தப் படுகிறது. அதாவது, ஓர் அடியான் இதுவரை காலமும் வாழ்ந்து வந்த பிழையான வழிமுறையிலிருந்து திரும்பி நேரான வழிமுறையை நோக்கி மீள்வதையே இது குறிக்கின்றது.

(பரிபாஷைக் கருத்து குறிப்பிட்டிருப்பின் 02 புள்ளிகள். மொழிக்கருத்து மாத்திரம் எழுதியிருப்பின் 01 புள்ளி)

**(ii) 'தௌபா' செய்யும்போது பேணப்பட வேண்டிய நிபந்தனைகளுள் நான்கைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)**

- தூய எண்ணத்துடன் (இக்லாஸுடன்) பாவமன்னிப்புக் கோரல்
- குறிப்பிட்ட பாவச் செயல்களில் ஈடுபடுவதை முற்றுமுழுதாக விட்டுவிடல்.
- தான் செய்த பாவத்தை நினைத்து மனம் வருந்துதல்.
- குறிப்பிட்ட பாவச்செயலில் இனிமேல் ஈடுபடுவதில்லை என்று உறுதிகொள்ளல்.
- செய்த பாவம் மனிதர்களுடன் சம்பந்தப்பட்டதெனில், அவர்களிடம் மன்னிப்புக் கோரல்.

**(மேலுள்ள கருத்துக்களுள் நான்கு விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் $1 \times 4 = 4$ புள்ளிகள்)**

**(iii) ஈமான், அமல், அக்லாக் என்பவற்றுக்கிடையிலான தொடர்புகளை விளக்குக. (06 புள்ளிகள்)**

- ஈமான் ஆனது இபாதாத், முஆமலாத், அக்லாக் ஆகியவற்றுடன் பரஸ்பர தொடர்பைக் கொண்டுள்ளது.
- இபாதாத், முஆமலாத், அக்லாக் ஆகியவற்றில் ஈமான் செல்வாக்கு செலுத்துவது போலவே அவை ஒவ்வொன்றும் ஈமானுக்குச் சான்று பகர்வனவாயும் உள்ளன.
- ஈமான், அமல் ஆகிய ஒவ்வொன்றும் வெளிப்படுத்தும் ஈமானின் அளவுக்கு ஏற்பவே அவற்றின் தரம் அமைகிறது. தரத்துக்கு ஏற்பவே அல்லாஹ்விடம் வெகுமதி வழங்கப்படுகிறது. ஈமான் இல்லாத அமல்கள் கானல் நீர் போன்றது.
- ஈமானுடன் இரண்டறக் கலந்த இபாதாத், அக்லாக் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பு சுழற்சி முறையில் காணப்படுகிறது. அதாவது, ஈமானுடனான இபாதாத் சிறந்த அக்லாக்குகளை ஏற்படுத்தும் போது பிற மனிதர்களோடு உள்ள தொடர்புகள் சிறப்புறுகின்றன.
- ஈமான், அமல், அக்லாக் ஆகியவற்றிற்கிடையில் இஸ்லாம் ஏற்படுத்தியுள்ள தொடர்பை விளக்கப் பின்வரும் உதாரணம் மிகவும் பொருத்தமானது. ஈமான் உயிர் போன்றது. அமல் உடல் போன்றது. அக்லாக் உடலை மறைக்கும், அலங்கரிக்கும் ஆடை அணிகலன் போன்றதாகும்.
- ஈமான் மூலம் வெளிப்படும் அமல்களை அக்லாக் எனும் ஆடை அணிகலன்களினால் அலங்கரிப்பவனாக ஒரு முஸ்லிம் இருக்க வேண்டும். இதுவே அவனது இம்மை மறுமை வெற்றிக்கு வழியாகும்.

**(இவை போன்ற மூன்று கருத்துக்கள் மூன்று அம்சங்களுடனும் தொடர்புபடுத்தி விளக்கியிருப்பின் $3 \times 2 = 6$ புள்ளிகள்)**

* 3ஐ தொடர்புபடுத்தாது வெளிப்படுத்தின் 2 புள்ளிகள் வழங்கவும்.

(iv) ஆன்மீக மேம்பாட்டுக்குத் தடையாகவுள்ள அம்சங்கள் நான்கைக் குறிப்பிட்டு, விளக்குக.

**(08 புள்ளிகள்)**

- அகம்பாவம், பொறாமை, கர்வம், தீய எண்ணம், நிபாக், ரியாஉ, மனோஇச்சைக்குக் கட்டுப்படல், அவசர புத்தி, கோபம், சுயநலம் போன்றவைகள் ஆன்மீக மேம்பாட்டுக்கு ஊறு விளைவிக்கின்றன.

**அகம்பாவம் / தற்பெருமை**

- "ரஹ்மானின் அடியார்கள் பூமியில் பணிவாக நடப்பார்கள்" (அல்குர்ஆன் 25:63)
- இறைவன் கூறுகின்றான்."பெருமை, கண்ணியம் என்பன எனது ஆடைகளாகும். இவற்றில் ஒன்றையாவது எவன் என்னிடமிருந்து எடுத்துக் கொள்கிறானோ அவனை நரகில் நுழையச் செய்வேன். (இப்னு மாஜா)

**பொறாமை**

- "விறகை நெருப்பு எரிப்பது போல் நன்மைகளைப் பொறாமை எரித்துவிடும். (அபூதாவூத்)
- "வேதம் கொடுக்கப்பட்டவர்கள், நபியவர்களை எதிர்ப்பதற்கு பொறாமை தான் காரணமாக இருந்தது" (அல்குர்ஆன் 2:119)

**பொய் பேசுதல்**

- தன் இரு கண்களும் பார்த்திராத ஒன்றை இரு கண்களுக்கும் காட்டுவதே அனைத்தையும் விட பெரிய பொய்யாகும். (புகாரி)
- "உண்மை திருப்தியைத் தரும். பொய் ஐயங்களுக்கும் சபலங்களுக்கும் வழிவகுக்கும்" (திர்மிதி)

புறம் பேசுதல்

- (எவருடைய குற்றத்தையும்) நீங்கள் துருவித் துருவி விசாரித்துக் கொண்டிருக்க வேண்டாம். உங்களில் ஒருவர் மற்றெவரையும் பற்றி புறம் பேச வேண்டாம். உங்களில் எவனும் இறந்துவிட்ட தன்னுடைய சகோதரனின் மாமிசத்தைப் புசிக்க விரும்புவானா? அதனை நீங்கள் வெறுப்பீர்களே! (புறம் பேசுவதும் அவ்வாறே) நீங்கள் அல்லாஹ்விற்குப் பயந்துகொள்ளுங்கள்" (அல்குர்ஆன் 49:12)
- ஒருமுறை ஆயிஷா (றழி) அவர்கள், ஸபிய்யா (ரழி) அவர்கள் குட்டையானவர் எனப் பேசியதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள் ஆயிஷாவை நோக்கி "நீர் இப்போது பேசிய வார்த்தையை கடல்நீரில் கலந்துவிட்டால் அது கூட நாசமாகிவிடும் என்றார்கள். (அபூதாவூத்)

**கோள் மூட்டுதல்**

- "நபியே! (எடுத்ததற்கெல்லாம்) சத்தியம் செய்யும் எந்த நீசனையும் நீர் பின்பற்றாதீர். அவன் சதா (புறம் பேசிக்) குற்றங் கூறி, கோள் சொல்வதையே தொழிலாகக் கொண்டு திரிபவன்" (அல்குர்ஆன் 68:10)
- "கோள் சொல்லித் திரிபவன் சுவனம் நுழையமாட்டான்" (புஹாரி)

**அவதூறு கூறல்**

- "எவர் கற்புடைய பெண்கள் மீது அவதூறு கூறி (அதற்கு வேண்டிய) நான்கு சாட்சிகளை அவர் கொண்டு வராவிட்டால், அவர்களை நீங்கள் எண்பது கசையடி அடியுங்கள். பின்னர் அத்தகைய வர்கள் கூறும் சாட்சியத்தை எக்காலத்திலும் ஒப்புக்கொள்ளாதீர்கள். நிச்சயமாக அவர்கள் (வரம்பு மீறிய) தீயவர்கள். (அல்குர்ஆன் 24:04)

**பேராசை**

- பேராசை மனித உள்ளத்தில் வளரும் போது தயாள குணம் மறைந்து கஞ்சத்தனம் ஏற்படும். (அல்குர்ஆன் 102:1-2), (அல்குர்ஆன் 3:14)
- உலக இன்பங்களை தேடி அலைபவர்களை விட்டுவிடுங்கள். யார் உலக இன்பங்களில் தன் தேவைக்கதிகம் எடுத்துக்கொள்கிறானோ அவன் அழிவைத் தேடிக்கொள்கிறான் (பஸ்ஸார்)

**2. (i) மௌழூஆன ஹதீஸை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)**

"நபி (ஸல்) அவர்கள் சொல்லாத, செய்யாத, அங்கீகரிக்காதவற்றை, அவர்களது பண்புகளில், வர்ணனைகளில் அடங்காதவற்றை சொன்னதாகவோ, செய்ததாகவோ, அங்கீகரித்ததாகவோ, பண்புகள், வர்ணனைகளில் அடங்குவதாகவோ பொய்யாக குறித்துக் காட்டுவதனையே மௌழூஆன (போலியான) ஹதீஸ் என்பது குறிக்கின்றது."

**(வரைவிலக்கணம் குறிப்பிடப்பட்டிருப்பின் 2 புள்ளிகள்)**

**(ii) மக்பூலான ஹதீஸ் மற்றும் மர்தூதான ஹதீஸ் என்பவற்றை வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)**

**மக்பூலான ஹதீஸ்:**

- மக்பூலான ஹதீஸ் என்பது அறிவிப்பாளரினதும் சொல்லப்பட்ட செய்தியினதும் நம்பகத்தன்மை வலுவானதாக அமைகின்ற ஹதீஸ் வகையைக் குறிக்கின்றது.
- இவ்வகை ஹதீஸ்கள் ஆதாரபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்படக்கூடியனவாகவும், ஏற்று அமல் செய்யக்கூடியனவாகவும், மார்க்கத்தின் அல்லது ஷரீஅத்தின் எல்லாத் துறைகளிலும் பிறருக்கு ஏவக்கூடியனவாகவும் அமைகின்றன.

**மர்தூதான ஹதீஸ்:**

- மர்தூதான ஹதீஸ் என்பது அறிவிப்பாளரினதோ அல்லது சொல்லப்பட்ட செய்தியினதோ நம்பகத்தன்மை வலுக்குன்றியதாக அமைந்த ஹதீஸ் வகையைக் குறிக்கின்றது. இவ்வாறான ஹதீஸைப் பொறுத்தவரை அவற்றை ஆதாரமாக ஏற்கவோ, அதனடிப்படையில் அமல் செய்யவோ அல்லது செயலாற்றவோ, பிறருக்கு அவற்றை ஏவவோ முடியாது.
- ஆயினும், இவ்வாறான ஹதீஸ்களில் சில வகைகளை நிபந்தனைகளுடன் ஏற்றுக் கொள்ள முடியுமென ஹதீஸ்கலை வல்லுனர்கள் சிலர் குறிப்பிடுகின்றனர்.

**(இரண்டினதும் வேறுபாடுகள் தெளிவாக குறிப்பிடப்பட்டிருப்பின் $2 \times 2 = 4$ புள்ளிகள்)**

**(iii) மௌழூஆன ஹதீஸ்கள் தோன்றியமைக்கான காரணங்கள் மூன்றினை உதாரணங்களுடன் விபரிக்குக. (06 புள்ளிகள்)**

- **அரசியல் ரீதியான காரணங்கள்:**
  - "நெருப்பு விறகை எரிப்பது போல அலியை நேசிப்பது பாவச் செயல்களை அழித்துவிடும்" (மௌழூஉ)
  - "அல்லாஹ்விடத்தில் நம்பிக்கைக்குரியவர்கள் மூவர் நான், ஜிப்ரீல், முஆவியா" (மௌழூஉ)
- **ஸின்தீக்குகள் அல்லது இஸ்லாத்தின் எதிரிகளின் நடவடிக்கைகள்:**
  - "அல்லாஹ் தனது மார்பிலும் கரங்களிலுமுள்ள மயிர்களினால் மலக்குகளைச் சிருஷ்டித்தான்." (மௌழூஉ)
  - "அழகான முகத்தைப் பார்ப்பது இபாதத் ஆகும்". (மௌழூஉ)
- **மொழி இனம், பிரதேசம், மத்ஹப், இமாம் எனும் விடயங்களில் வெறிகொண்டவர்கள் இட்டுக்கட்டியவை:**
  - "அல்லாஹ்வின் அர்ஷைத்தாங்கி இருப்பவர்கள் பாரசீக மொழியைப் பேசுகினறனர். அல்லாஹ் வஹி அருளும் போது மென்மையான விடயங்களை பாரசீக மொழியிலும் கடினமான விடயங்களை அரபு மொழியிலும் அருளுகிறான்" (மௌழூஉ)
  - "அரபு சுவர்க்கத்தின் மொழி, அல்லாஹ்விடம் மிகவும் வெறுப்புக்குரிய மொழி பாரசீக மொழி" (மௌழூஉ)
  - "மக்கா மதீனா, பைதுல் முகத்தஸ், திமிஷ்க் (டமஸ்கஸ்) ஆகிய நான்கு நகரங்களும் இவ்வுலகத்தின் சுவர்க்க நகரங்களாகும்." (மௌழூஉ)
  - "எனது உம்மத்தில் அபூஹனீபா இப்னு நு.்.மான் என ஒருவர் தோன்றுவார். அவர் சமூகத்தின் ஒளி விளக்காவார்." (மௌழூஉ)
  - "முஹம்மத் இப்னு இத்ரீஸ் என்ற ஒருவர் பிற்காலத்தில் எனது சமூகத்தில் தோன்றுவார். அவர் இப்லீஸை விடவும் கேடுகெட்ட வராக இருப்பார்." (மௌழூஉ)

- **உபதேசிகளும் கதை சொல்லிகளும் இட்டுக்கட்டியவை:**
  - o "யார் 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என்று மொழிகின்றாரோ அதன் ஒவ்வொரு சொல்லுக்கும் அல்லாஹ் ஒவ்வொரு பறவையைச் சிருஷ்டிக்கின்றான். அப்பறவையின் சொண்டு தங்கத்தினாலும் இறக்கை நவரத்தினங்களினாலும் ஆக்கப்பட்டிருக்கும்." (மௌழூஉ)
  - o "நூஹ் நபியின் கப்பல் தூபான் வெள்ளத்தில் மிதந்து க.்.பதுல்லாஹ்வை ஏழுமுறை வலம்வந்து ஒருமுறை ஸுஜூது செய்தது." (மௌழூஉ)

- **பிக்ஹிலும் இல்முல் கலாமிலும் கருத்து வேறுபாடு கொண்டவர்கள் இட்டுக்கட்டியவை:**
  - o "எவர் தொழுகையில் தமது இரு கரங்களையும் உயர்த்துகின்றாரோ அவரது தொழுகை முறிந்துவிட்டது." (மௌழூஉ)
  - o "எவர் அல்குர்ஆன் படைக்கப்பட்டது என்று கூறுகிறாரோ அவர் காபிராகிவிட்டார்." (மௌழூஉ)

- **மார்க்கத்தில் அறியாமையும் நல்லதைச் செய்யவேண்டும் என்ற ஆசையும் கொண்டவர்கள் இட்டுக்கட்டியவை:**
  - o "நாங்கள் றஸுலுக்கு சார்பாக இட்டுக்கட்டினோம்" என சமாதானம் கூறினார்கள்.
  - o குலாம் கலீல் என்பவரது செயற்பாடு

- **ஆட்சியாளர்களதும் செல்வந்தர்களதும் நலன் தேடுவதற்காக இட்டுக்கட்டப்பட்டவை:**
  - o அப்பாஸிய கலீபா மஹ்தியிடம் இயாஸ் இப்னு இப்ராஹிம் கூறிய போலியான ஹதீஸ் "அம்பையும், குதிரையையும், ஒட்டகத்தையும் தவிர வேறு எதனையும் போட்டிக்கு விடுவது கூடாது" (அல்ஹதீஸ்) "பறவைகளையும்" எனும் சொல்லையும் இதனுடன் சேர்த்துக் கூறினான்.

- **பொருட்களை விளம்பரம் செய்வதற்காக இட்டுக்கட்டப்பட்டவை:**
  - o "எவன் கத்தரிக்காய் சாப்பிடுகின்றானோ, அவன் சுவர்க்கம் நுழைவான்" (மௌழூஉ)

3 points [illegible] 3×1 − 3

(மூன்று காரணங்கள் உதாரணங்களுடன் விபரிக்கப்பட்டிருப்பின் $3 \times 2 = 6$ புள்ளிகள்)

**(iv) இஜ்மாஉ ஒரு சட்ட மூலாதாரம் என்பதனை அல்குர்ஆன், ஸுன்னா ஆதாரங்களினூடாக நிறுவுக.**

**(08 புள்ளிகள்)**

- o அல்குர்ஆன், ஸுன்னாவை அடுத்து இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய இஜ்திஹாதின் அடிப்படையில் உருவாகிய மிக முக்கியமான துணை மூலாதாரம் இஜ்மாவாகும்.
- o இஜ்மாஉ அங்கீகாரம் பெறுகின்றது என்பதற்கு அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ் ஆதாரங்கள் காணப்படுகின்றன.

**அல்-குர்ஆன் வசனங்களில் இஜ்மாவுக்கான ஆதாரங்கள்:**

- "மேலும் (யுத்த) அமைதியோ அல்லது பீதியோ பற்றிய யாதொரு செய்தி அவர்களுக்கு வந்துவிட்டால் (உடனே) அவர்கள் அதனைப் (வெளியில் மக்களிடையே) பரப்பி விடுகின்றனர். (அவ்வாறு செய்யாது) அதனை (அல்லாஹ்வுடைய தூதரிடமும், அவர்களில் (மார்க்க ஞானமுள்ள) அதிகாரமுடையவர்களிடமும் தெரிவித்திருந்தால் அவர்களிலிருந்து அதனை ஆய்ந்து எடுப்பவர்கள் அதனை (நன்கு) அறிந்து கொள்வார்கள்" (அல்குர்ஆன் 4:83)
- "நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள், இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் (தலைவர்களுக்கும்) கீழ்படியுங்கள்" (அல்குர்ஆன் 04:59)
- "எவனொருவன் நேர்வழி இன்னது என்று தனக்குத் தெளிவான பின்னரும், (அல்லாஹ்வின்) இத்தூதரை விட்டுப் பிரிந்து, மு.்.மின்கள் செல்லாத வழியில் செல்கின்றானோ, அவனை அவன் செல்லும் (தவறான) வழியிலேயே செல்லவிட்டு நரகத்திலும் அவனை நுழையச் செய்வோம் அதுவோ, சென்றடையும் இடங்களில் மிகக் கெட்டதாகும்." (அல்குர்ஆன் 4:115)
- மக்கள் மீது சாட்சி கூறுவோராகவும், நீதியை ஏற்படுத்துவோராகவும் அமையும் பொருட்டு உங்களை நாம் நடுநிலையான சமூகமாக அமைத்துள்ளோம். (அல்குர்ஆன் 2:143)

**ஹதீஸில் இஜ்மாஉ விற்கான ஆதாரங்கள்:**

- “எனது உம்மத்தினர் தவறான விடயங்களில் ஒன்றுபட மாட்டார்கள்” (இப்னு மாஜா)
- “சத்தியத்தில் நிலைத்திருக்கக்கூடிய ஒரு கூட்டம் எனது சமூகத்தில் என்றென்றும் இருந்து வருவார்கள்” (அபூதாவூத்)
- “எவர் தலைமைத்துவத்திற்கு கட்டுப்படுவதில் இருந்து விலகிச் சென்று ஜமாஅத்தைவிட்டும் பிரிந்து மரணிக்கின்றாரோ அவரது மரணம் ஜாஹிலிய்யத்தைச் சேர்ந்ததாகும்” (முஸ்லிம்)
- “முஸ்லிம்கள் நல்லதாகக் கருதுபவை அல்லாஹ்விடம் நல்லதாகவே இருக்கும். அவ்வாறே அவர்கள் தீயதாகக் கருதுபவை அல்லாஹ்விடம் தீயதாகவே இருக்கும்.” (அஹ்மத்)
- “யார் சுவர்க்கத்தின் இன்பங்களைச் சுவைக்க விரும்புகிறாரோ அவர் சமூகத்தோடு இணைந்திருக்கட்டும்.”

**(இவைபோன்ற இரண்டு அல்குர்ஆன் மற்றும் ஸுன்னா ஆதாரங்களைக் குறிப்பிட்டு நிறுவியிருப்பின் 2 x 4 = 8 புள்ளிகள்)**

3. (i) **உணவு உட்கொள்வதற்கான இஸ்லாத்தின் நோக்கங்களில் இரண்டைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)**

1. மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதி என்றவகையில் உயிர்வாழ்வதற்கு
2. அல்லாஹ்வினால் கடமையாக்கப்பட்ட வாழ்க்கைப் பணிகளை நிறைவேற்றுவதற்கு.
3. உடலின் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு.
4. உற்சாகமாக வணக்கவழிபாடுகளில் ஈடுபடுவதற்கு.
5. எதிரிகளிடமிருந்து இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் பாதுகாப்பதற்கு.

**(இவைபோன்ற இரண்டு கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 1 x 2 = 2 புள்ளிகள்)**

(ii) **ஆடை அணிதல் தொடர்பான இஸ்லாத்தின் நோக்கங்களை எழுதி, அவை தொடர்பான ஒரு ஹதீஸ் ஆதாரத்தைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)**

- இஸ்லாம் ஆடை அணிதலுக்கு இரண்டு நோக்கங்களை முன்வைத்துள்ளது.
  1. உடலையும் மானத்தையும் மறைத்தல்
  2. வெளித் தோற்றத்தை அழகுபடுத்தல்
- ஒரு ஸஹாபி “எம்மில் ஒருவர் தனித்து இருந்தால் அவ்ரத்தை மறைப்பது அவசியமா? எனக் கேட்ட போது, நபி (ஸல்) அவர்கள், “நீ வெட்கப்படுவதற்கு அல்லாஹ் மிகப் பொருத்தமானவன்” என்றார்கள். (அஹ்மத், திர்மிதி, அபூதாவூத்)
- சாதாரண உடைகளுடன் ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களைச் சந்திக்க வந்தார். ‘உன்னிடத்தில் செல்வம் உண்டா”? என நபி (ஸல்) அவர்கள் அம்மனிதனிடத்தில் வினவினார்கள். அவர் ‘ஆம்” என்றார். “அல்லாஹ் அவனது அருட்கொடைகளின் வெளிப்பாட்டை அடியார்களில் காண்பதை விரும்புகிறான்” எனக் குறிப்பிட்டார்கள் (நஸாஈ).

**(நோக்கங்களுக்கு 2 புள்ளிகளும் ஹதீஸ் ஆதாரத்திற்கு 2 புள்ளிகளுமாக மொத்தம் 4 புள்ளிகள்)**

(iii) **உண்பதற்கு தடுக்கப்பட்ட மாமிச உணவோடு தொடர்பான இஸ்லாமிய வழிகாட்டல்களைத் தருக. (06 புள்ளிகள்)**

- மாமிச வகைகளில் ஹராமாக்கப்பட்டவைகள்:
  - செத்த பிராணிகள், இரத்தம், பன்றியின் மாமிசம்.
  - முறையாக ‘தப்ஹ்’ செய்யப்படாத பிராணிகள்
  - கழுத்து இறுகுவதால் இறப்பவை
  - தாக்குதலுக்குள்ளாகி இறப்பவை
  - உயர்வான இடத்திலிருந்து கீழே விழுந்து இறப்பவை
  - வேறு மிருகங்களின் கொம்பால் குத்தப்பட்டு இறப்பவை
  - பலி பீடங்களில் அறுக்கப்பட்ட பிராணிகள்
  - தடுக்கப்பட்ட மிருகங்களினதும், பறவைகளினதும் மாமிசங்கள்.

“நபி (ஸல்) அவர்கள் கொடிய காட்டு மிருகங்களில் கூரிய பற்களைக் கொண்ட மிருகங்களையும், பறவைகளில் கூரிய நகங்களைக் கொண்ட பறவைகளையும் உண்ண வேண்டாம் என தடுத்தார்கள்” (புஹாரி)

உதாரணம்: சிங்கம், புலி, ஓநாய், கழுகு, பருந்து, வல்லூறு. ஜல்லாலாவினது இறைச்சிகளை உண்பதையும் அவற்றில் ஏறிப் பிரயாணம் செய்வதையும் நபி (ஸல்) அவர்கள் தடுத்தார்கள்.

**(ஆறு அம்சங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் $1 \times 6 = 6$ புள்ளிகள்)**

**(iv) இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் திருமணத்தின் நோக்கங்கள் நான்கைக் குறிப்பிட்டு விளக்குக.**

**(08 புள்ளிகள்)**

**1. ஆண்கள், பெண்கள் தம் கற்பையும், ஒழுக்கத்தையும் பாதுகாத்துக் கொள்ளல்.**

- விபச்சாரம், தன்னினச் சேர்க்கை போன்ற தகாத உறவுகளை நெருங்கக் கூடாது என வலியுறுத்தி பாலியல் உணர்வைத் தீர்த்துக் கொள்வதற்கும், கற்பைப் பேணிப் பாதுகாத்துக் கொள்வதற்கும், ஒழுக்கப் பண்புகளைக் காத்துக் கொள்வதற்கும் திருமணத்தை வலியுறுத்தியுள்ளது.

**2. பண்பாடுள்ள சமூக விருத்திக்கு அடிப்படையாகவுள்ளது.**

- மனித சமூகத்தின் நிலைப்பாட்டுக்கும் அவனது வாழ்க்கைப் பணிகளை நிலைநாட்டுவதற்கும் அடிப்படையாயிருத்தல்.

**3. கணவன் மனைவியரிடையே அன்பு, இரக்கம், பாசம் உதவி செய்தலையும் ஊக்குவித்தல்.**

- அல்குர்ஆனில் கணவன், மனைவி பரஸ்பர உறவு, உடைக்கும் உடலுக்கும் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளமை, அவ்விருவரிடமும் இருக்க வேண்டிய நெருக்கமான உறவின் தன்மையைச் சுட்டிக் காட்டுகிறது.

**4. குடும்ப, சமூக நலன்களையும் மானிடப் பெறுமானங்களையும் காத்தல்.**

- திருமணம் மூலம் கணவன் மனைவி பரஸ்பர பொறுப்புணர்வு தோற்றுவிக்கப்படுவதன் மூலம் ஆரோக்கியமான குடும்பம், சமூகம் உருவாக வழி பிறக்கின்றது.

**5. ஒரு தலைமுறை இன்னொரு தலைமுறைக்கு மனிதத்துவப் பண்பாடுகளைக் கடத்த முடிகின்றமை.**

- திருமணம் மூலம் உருவாகும் இவ்வாறான சந்ததிகளே மனித இனத்தின் ஆரோக்கியமான நீண்டகால இருப்பை உறுதி செய்கின்றன.

**(இவை போன்ற நான்கு கருத்துக்களைக் குறிப்பிட்டு விளக்கியிருப்பின் $4 \times 2 = 8$ புள்ளிகள்)**

[2 + 4 + 6 + 8 = 20]

**4. (i) சமூக முன்னேற்றத்திற்கு மஸ்ஜிதுகள் ஆற்ற வேண்டிய பணிகளை அடையாளப்படுத்தி விளக்குக.**

- மஸ்ஜிதை மையமாக கொண்டு சமூகம் கட்டியெழுப்பப்படல் வேண்டும். சமூக உறுப்பினர்கள் ஆன்மீகம், கல்வி, பொருளாதாரம், சுகாதாரம், ஆரோக்கியம், பண்பாடு, ஒழுக்கம் போன்ற துறைகளில் பயிற்றுவிக்கப்படல் வேண்டும்.
- சமூக முன்னேற்றத்திற்கு மஸ்ஜிதுந் நபவி ஆற்றிய பங்கை இன்றைய மஸ்ஜிதுகள் ஆற்ற வேண்டும். அப்பணிகளாவன :
  - சமூகத்தலைமையகமாக செயற்படல்.
  - ஆன்மீக பயிற்சி வழங்குதல்.
  - பிற மதத்தவர்களுடன் கலந்துரையாடும் இடமாக இருத்தல்.
  - சமூக விவகாரங்கள் கலந்தாலோசிக்கப்படல்.
  - கல்வி நிலையமாக செயற்படல் ~~வேண்டும்.~~
  - சமூகத்தின் பொருளாதார தேவைகளை நிறைவேற்றும் இடமாக செயற்படல்.
  - நூல் நிலையங்கள் அமைக்கப்படல்.
  - சமூக ஒற்றுமையையும் சமய, இன நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் வழிகளில் கவனம் செலுத்துதல்.
  - தகவல் திரட்டுதல், மதிப்பீட்டு பணிகளில் கூடிய கவனம் செலுத்துதல்.
  - இளைஞர்களுக்கான வழிகாட்டல்களை வழங்குதல்.
  - எதிர்கால ஆளுமைகளை உருவாக்குதல்.

  இவ்வாறான பணிகளை இன்றைய மஸ்ஜிதுகள் நிறைவேற்ற வேண்டும்.

**(இவ்வாறான ஐந்து கருத்துக்கள் விளக்கப்பட்டிருப்பின் 5 x 2 = 10 புள்ளிகள்)**

5 points ... 1x5

**(ii) மறுமை வாழ்வு அவசியம் என்பதற்கான நியாயங்களைத் தெளிவுபடுத்துக.**

- மனிதனின் எதிர்பார்ப்புகள் பூர்த்திசெய்யப்படுவதற்கு மறுமை அவசியம்.
- உலகம் செயற்பாட்டின் பூரண விளைவைத் தருவதில்லை. நன்மை செய்தோருக்கான பூரண கூலியோ, தீங்கு செய்தோருக்கான பூரண தண்டனையோ வழங்கப்படுவதில்லை.
- மனிதனது எல்லா ஆசைகளும் கனவுகளும், எதிர்பார்ப்புக்களும் இவ்வுலகில் நிறைவேறுவதில்லை. அவை நிறைவேற இன்னும் ஒரு உலகம் தேவை.
- மனிதன் மரணிக்க விரும்புவதில்லை தொடர்ந்து உயிர்வாழவே விரும்புகிறான். ஆனால் உலக நியதி நிரந்தர வாழ்வு கிடைப்பதில்லை. நிரந்தர உலகு தேவை என்பதை மனம் ஏற்றுக் கொள்ளும்.
- மனிதனின் செயற்பாட்டுக்கான தண்டனை அல்லது பரிசு வழங்கப்படுவதற்குப் பொருத்தமான நீண்ட கால களம் தேவை. அதற்கு மறுமை அவசியப்படுகிறது.
- மனிதன் ஏனைய படைப்புக்களிலிருந்து வித்தியாசப்படுத்தி உயர்ந்த படைப்பாக படைத்து அவனுக்கு உலகப் பொருட்களை வசப்படுத்தி கொடுத்து ஏனைய படைப்பினங்கள் போல் இவையும் மரணித்து மண்ணோடு மண்ணாக செல்வது எவ்வகையிலும் நியாயமற்றது.
- இறைவன் இருப்பதை உலகில் காணமுடியாது. மறுமையில் இறைவனைக் காணும் சந்தர்ப்பம் கிடைக்கப் பெறுகிறது.

**(இவைபோன்ற ஐந்து கருத்துக்கள் விளக்கப்பட்டிருப்பின் 5 x 2 = 10 புள்ளிகள்)**

5 points ... 1x5

10 + 10 (20)

**5. (i) சொல்லப்படும் முறை, சந்தர்ப்பம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்படும் தலாக்கின் இரு வகைகளையும் விளக்குக.**

தலாக் சொல்லப்படும் முறையைக் கருத்திற் கொண்டு இரண்டு வகைகளாக பிரிக்கப்படும்.

**1. முறையான தலாக் (தலாக் அஸ்ஸுன்னீ) :**

- இஸ்லாம் கூறும் வரம்புகளைப் பேணி தலாக் கூறுவதை இது குறிக்கும்.
- இதற்கான நிபந்தனைகள் :
  - o பெண் சுத்தமாக இருக்கும் காலத்தில் (துஹ்ர்) தலாக் சொல்லல்.
  - o பெண் சுத்தமாக இருக்கும் காலத்தில் உடலுறவு கொள்ளாத நிலையில் தலாக் சொல்லல்.
  - o விவாகரத்து கூற வழங்கப்பட்டுள்ள 3 சந்தர்ப்பங்களையும் முதலாம், இரண்டாம், மூன்றாம் சுத்தமான காலங்களில் தனித்தனியாக சொல்லல். ஒன்று அல்லது இரண்டு தடவைகளில் நிறுத்திக் கொண்டாலும் அது முறையான தலாகாகவே அமையும்.

**2. முறையற்ற தலாக் (தலாக் அல்பிதஈ)**

- இஸ்லாம் தலாக் கூற விதித்திருக்கும் நிபந்தனைகளைப் பேணாமல் தலாக் கூறுவதைக் குறிக்கும். முறையற்ற தலாக்குக்கான சில உதாரணங்களாவன.
  - o பெண் அசுத்தமாக இருக்கும் காலத்தில் விவாகரத்து கூறல்.
  - o பெண் சுத்தமாக இருக்கும் போது உடலுறவு கொண்ட நிலையில் தலாக் கூறல்.
  - o விவாகரத்துக்கு வழங்கப்பட்டுள்ள 3 சந்தர்ப்பங்களையும் ஒரே தடவையில் பயன்படுத்தி தலாக் கூறல்.

தலாக் சொல்லப்படும் சந்தர்ப்பத்தைக் கருத்திற் கொண்டு அது இரண்டு வகையாகப் பிரிக்கப்படும்.

**1. தலாக் ரஜஈ (மீளத்தக்கது) :**

- தலாக் ரஜஈ என்பது மீள வாய்ப்புள்ள தலாக்கை குறிக்கும். முறையான தலாக்கின் போது முதல் தடவை அல்லது இரண்டாம் தடவை தலாக் சொல்லப்பட்டு இத்தாக் காலம் முடிவதற்குள் மீண்டும் சேர்ந்து வாழ்வதற்கு தம்பதிகளுக்கு உரிமை உண்டு. இவ்வாறு சேர்வதற்கு நிபந்தனைகள் எதுவும் இல்லை.
- அல்குர்ஆன் ஆதாரம் (2 : 229 - 228)

**2. தலாக் பாஇன் (மீள முடியாதது)**

- தலாக் சொல்லப்பட்ட பெண்ணை மீண்டும் மீட்டிக் கொள்ள முடியாத தலாக். இது 2 வகைப்படும்.

**1. பாஇன் ஸுக்ரா (சிறிய பிரிவினை)**

- **தலாக் பாஇன் ஸுக்ரா என்பது** முறையான தலாக்கின் போது மூன்றாம் முறை தலாக் சொல்லப்படாத நிலையில் இத்தாக் காலம் பூர்த்தியாகி விடுமானால் புதியதொரு நிகாஹ் ஒப்பந்தத்தின் மூலம் தம்பதிகள் மீண்டும் சேர்ந்து வாழ அனுமதியுள்ள நிலையினைக் குறிக்கும். இந்நிலையில் தம்பதியினர் சேர்ந்து வாழ விரும்பினால் புதிய நிகாஹ் ஒப்பந்தத்தின் மூலம் சேர்ந்து வாழலாம்.

**2. தலாக் பாயின் குப்ரா (பெரிய பிரிவினை)**

- தலாக் பாயின் குப்ரா என்பது 3 தலாக்கும் கூறப்பட்டு முடிவுற்ற நிலையில் உள்ள பெரிய பிரிவினைக் குறிக்கும்.
- இதன் பின்னர் இவர்கள் திருமணத்தின் மூலம் சேர்ந்து வாழ விரும்பினால் அதற்குறிய வழி காட்டலையும் அல் குர்ஆன் கூறியுள்ளது. (பகரா:230)

**(தலாக் சொல்லப்படும் முறைக்கு 5 புள்ளிகளும் சந்தர்ப்பத்திற்கு 5 புள்ளிகளுமாக மொத்தம்** 5 + 5 = 10 **புள்ளிகள்)**

**(ii) இஸ்லாத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பிள்ளைகள் பெற்றோருக்கு ஆற்றவேண்டிய கடமைகளை விபரிக்குக.**

- பெற்றோருக்கு பிள்ளைகள் செய்ய வேண்டிய கடமைகளை இரண்டாக வகைப்படுத்தலாம்.
  1. பெற்றோர் உயிருடன் இருக்கும் போது செய்ய வேண்டியவை.
  2. பெற்றோர் மரணித்த பின் செய்ய வேண்டியவை.

**பெற்றோர் உயிருடன் இருக்கும் போது செய்ய வேண்டியவை**

- அழைப்புக்கு பதிலளித்தல்.
- அன்புடனும், கனிவுடனும் நடந்து கொள்ளல்.
- பெற்றோர் செய்த தியாகத்திற்காக நன்றியுணர்வுடன் நடத்தல்.
- புண்படுத்தும் வார்த்தைகளையோ காரியங்களையோ செய்யாதிருத்தல்.
- பணிவுடன் நடத்தல்.
- பெற்றோருக்கு கீழ்படிந்து நடத்தல்.
- பெற்றோரின் தேவைகளை நிறைவு செய்தல்.
- அவர்களுக்காக பிரார்த்தனை செய்தல்.
- பிறரின் நிந்தனைகளுக்கு பெற்றோரை உட்படுத்தாதிருத்தல்.
- பெற்றோரின் விருப்பு, வெறுப்புக்களை அறிந்து நடத்தல்.

**பெற்றோர் மரணித்த பின் செய்ய வேண்டியவை**

- ஜனாஸா கடமையை நிறைவேற்றல்.
- அவர்களது கடன்களை நிறைவேற்றல்.
- அவர்களுக்காக பாவமன்னிப்பு கோரல்.
- அவர்கள் செய்திருந்த ஒப்பந்தங்களை நிறைவேற்றல்.(மரண சாசனம், வாக்குறுதிகள்)
- அவர்களது உறவினர்களை கண்ணியப்படுத்தல், அவர்களுக்கு முடிந்தளவு உபகாரம் புரிதல்.
- அவர்களின் நண்பர்கள், பழகியவர்களை கண்ணியப்படுத்தலும் நல்ல முறையில் நடந்து கொள்ளலும்.

**(இவைபோன்ற 5 விடயங்கள் விபரிக்கப்பட்டிருப்பின் $5 \times 2 = 10$ புள்ளிகள்)**

6. **(i) இஸ்லாமிய சட்டவாக்க வரலாற்றில் 'இஜ்திஹாதின் வாயில் மூடப்பட்டுவிட்டது' என்ற சிந்தனையால் ஏற்பட்ட விளைவுகளை ஆராய்க.**

- மத்ஹப் பற்று அதிகரித்தமை.
- மத்ஹபுகளுக்கிடையே அதிகமான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றமை.
- தக்லீது ஒரு பொதுப் பண்பாக மாறியமை.
- அல்குர்ஆனையும், ஹதீஸையும் ஆராய்வதை விட்டுவிட்டு இமாம்களின் கருத்துக்களை ஆராய முற்பட்டமை.
- விளங்குவதற்கு கஷ்டமான விடுகதைகள் போன்றவற்றை உள்ளடக்கிய நூல்களை உருவாக்கியமை.
- பகுத்தறிவின் பயன்பாட்டை அறியாது போனமை.
- அல்குர்ஆன் ஸுன்னாவுடனான நேரடித் தொடர்பு அற்றுப்போனமை.

**(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் விளக்கி எழுதப்பட்டிருப்பின் $5 \times 2 = 10$ புள்ளிகள்)**

**(ii) அல்குர்ஆனின் மொழி ரீதியான மற்றும் விஞ்ஞான ரீதியான அற்புதங்களை நுணுக்கமாக ஆராய்க.**

- **மொழி ரீதியான அற்புதம்**
  - கவிதை, உரைநடை போன்ற இலக்கியத் துறைகளில் புலமை பெற்றிருந்த மொழியியல் வித்தகர்கள் அல் குர்ஆனின் போதனைகளை ஏற்க மறுத்தாலும் அதன் மொழிச் சிறப்பை ஆராய்ந்து அதன்பால் ஆகர்ஷிக்கப்பட்டனர்
  - கவிதையாகவோ, உரைநடையாகவோ இல்லாமல் அனைத்துத் துறை சார்ந்த கருத்துக்களையும் முன்வைக்கும் அதன் பாங்கு வித்தியாசமானது.
  - அபூ ஜஹ்ல், அபூ ஸுப்யான் போன்ற இலக்கியப் பித்தர்கள் அல்குர்ஆன் ஓதப்படுவதை இரகசிய மாகக் கேட்டு இரசித்தனர்.
  - வலீத் பின் முகீரா என்ற இலக்கியவாதி அல்குர்ஆனுக்கு வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு புகழாரத்தை இவ்வாறு சூட்டினார். "அதற்குச் சுவையுண்டு. ~~கட்டாயம் அது ஓதப்பட வேண்டியது~~. அதன் மேற்புறம் காய்த்துக் கனி தரக் கூடியது. கீழ்ப்புறம் ஆழமாக வேரூன்றியது. அது மிகைத்துச் செல்லும். அதனை எதனாலும் மிகைக்க முடியாது."
  - லபீத் என்ற புகழ்பூத்த கவிஞன் ஸூரதுல் பகராவை மற்றும் ஆல இம்ரானை ஓதியதன் பின் கவிதை புனைவதையே கைவிட்டு விட்டார்.
  - ஸூரதுன் நஜ்மை ஓதிய வேளை செவிமடுத்துக்கொண்டிருந்த சில குரைஷியர் நபியவர்களுடன் சேர்ந்து ஸுஜூதில் வீழ்ந்தார்கள். (புஹாரி)

- **விஞ்ஞான ரீதியான அற்புதம்**
  - இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பு கூட கற்பனை பண்ணவும் முடியாதிருந்த உண்மையை 1400 ஆண்டுகளுக்கு முன் அல்குர்ஆன் கூறியுள்ளதை இன்று விஞ்ஞான உலகம் நிரூபித்துள்ளது.
  - உதாரணமாக: பிரபஞ்ச தோற்றம் பற்றி (நவீன விஞ்ஞானம் இதனை பெருவெடிப்பு கொள்கை என்கிறது) - அன்பியா 30 வசனம் குறிப்பிடுகின்றது.
  - சிசு உருவாக்கம் பற்றி (சூரதுல் ~~ஹஜ்~~ - 5) வசனம் குறிப்பிடுகின்றது.
  - இரு கடல்கள் ஒன்றை ஒன்று சந்திப்பதும் அவற்றிற்கிடையில் தடுப்பு இருப்பது பற்றி (சூரதுர் ரஹ்மான் 19 – 20) வசனங்கள் குறிப்பிடுகின்றன.
  - மேலே செல்லச் செல்ல ஒட்சிசனின் அடர்த்தி குறைவடைவது தொடர்பாக (சூரதுல் அன்ஆம் - 125) வசனம் குறிப்பிடுகின்றது.
  - மகரந்தச் சேர்க்கை, மழைமேகம் பற்றி (அல்ஹிஜ்ர் : 22) வசனம் குறிப்பிடுகின்றது.
  - இன்று வரை அறிவியல் உலகம் புரிந்துகொள்ளாத அறிவியல் கருத்துக்கள் (அர்ர.்.த் : 2) வானங்கள் உயர்த்தப்பட்டுள்ளது பற்றிய கருத்து

**(இரண்டு பகுதியையும் உள்ளடக்கியதாக இவை போன்ற ஐந்து கருத்துக்கள் விளக்கி எழுதப்பட்டிருப்பின் 5x 2 = 10 புள்ளிகள்)**

* 5 point [illegible] – 5 marks.

– [illegible] 5x2 = 10 [illegible]

**7. (i) குற்றங்களுக்கு எதிராக இஸ்லாம் நிர்ணயித்துள்ள தண்டனைகளுக்கான நியாயங்களை முன்வைக்குக.**

1. இஸ்லாம் என்ன நோக்கங்களை இலக்காகக் கொண்டு தண்டனைகளை அமுல்படுத்துகின்றதோ அந்த நோக்கங்களை அடையக்கூடியதாக இருப்பதனால் அது நியாயமானதாகும்.

2. குற்றங்கள் நிகழ்வதைத் தடுக்கக் கூடிய ஒரு சூழலை உருவாக்கியதன் பின்னரே இஸ்லாம் தண்டனைகளை அமுல்படுத்துகின்றது. உதாரணமாக: திருமணம், பலதாரமணம் என்பன விபசாரத்துக்கான சூழலைத் தடுக்கும்.

3. குற்றம், தண்டனை பற்றி முன்கூட்டியே தெளிவை இஸ்லாம் வழங்கியுள்ளது. மிகத் தெளிவான முறையில் ‘ஜராஇமுல் ஹுதூத்’, ‘ஜராஇமுல் கிஸாஸ் வத்தியா’ பற்றி குர்ஆனிலும், ஸுன்னாவிலும் விளக்கப்பட்டுள்ளது.

4. மறுமையில் வழங்கும் தண்டனைகளை வலியுறுத்துவதன் ஊடாக மனப் பக்குவத்தை இஸ்லாம் வழங்குகின்றது. அதன் பின்னரே தண்டனைகளை அமுல்படத்துமாறு இஸ்லாம் பணிக்கிறது.

5. தண்டனைகளை வழங்குவதற்கு இஸ்லாம் பல நிபந்தனைகள் விதித்துள்ளது.
   - குற்றங்கள் சாட்சிகளுடன் நிறுவப்படல் வேண்டும்
   - குற்றவாளி தானாகக் குற்றத்தை ஒப்புக்கொள்ள வேண்டும்.
   - குற்றம் இழைக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கக் கூடாது.
   - அறிவு, சுதந்திரம் உள்ள நிலையில் குற்றம் நிகழ்ந்திருக்க வேண்டும்.
   - குற்றமிழைக்கும் மனநிலையில் குற்றத்தைச் செய்திருத்தல் வேண்டும்.
   - அவ்வாறு விதிக்கப்படும் தண்டனை ஆதாரபூர்வமானதாகவும், தர்க்க வாதத்துக்கும், மதிநுட்பமிக்க பகுத்தறிவுக்கும் பொருத்தமாகவும் இருக்குமேயன்றி அது எவ்விதமான குற்ற வியல் கொள்கைகளையும் தழுவியதாகவோ அல்லது ஒரு தேசத்தின் அல்லது தனிநபரின் விருப்பு வெறுப்புக்களால் பாதிக்கப்பட்டதாகவோ இருக்க மாட்டாது.

6. குற்றம் நிகழ்ந்த சூழலைக் கருத்திற் கொண்டு இஸ்லாமியத் தண்டனைகள் அமுல்படுத்தப்படு வதால் அது நியாயமானதாகவுள்ளது.

7. இஸ்லாம் கண்மூடித்தனமாகத் தண்டனைகளை அமுல்படுத்த இடமளிப்பதில்லை. “சந்தேகத்தின் அடிப்படையில் தண்டனைகளை நிறைவேற்றுவதைத் தவிர்ந்து கொள்ளுங்கள்” இதனை உமர் (ரழி) காலத்தில் இடம்பெற்ற ஒரு வரலாற்றுச் சம்பவம் தெளிவாகப் புலப்படுத்து கின்றது. (ஹாதிப் இப்னு அபீ பல்தஆவின் சம்பவம்)

8. குறிப்பிட்ட சில குற்றச் செயல்களுக்கு மன்னிப்பு வழங்குவதும் தண்டிக்கப்படுபவனின் குடும்ப நலனில் இஸ்லாம் காட்டும் அக்கறையும் இஸ்லாமியத் தண்டனை நியாயமானவை என்பதை நிரூபிக்கின்றது.

9. தனிநபர் சுதந்திரம் எல்லைக்குட்படுத்தப்பட வேண்டும் என்ற கொள்கைக்கு இஸ்லாமியத் தண்டனை உதவுவதால் அது நியாயமானதாகவுள்ளது.

10. நபி (ஸல்) அவர்களது காலத்திலும், குலபாஉர் ராஷிதூன்கள் காலத்திலும் தண்டனைகள் மிகக் குறைவாகவே அமுல்படுத்தப்பட்டுள்ளன.

11. தண்டனை வழங்கும் சந்தர்ப்பத்தில் கூட தனிமனித கௌரவத்தை பாதுகாக்கின்றமை (மாஇஸ், காமிதிய்யா போன்ற ஸஹாபாக்களுக்கு தண்டனை வழங்கிய விதம்)

**(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் விளக்கி எழுதப்பட்டிருப்பின் 5 x 2 = 10 புள்ளிகள் )**

(12) [illegible]

5 points [illegible]

**(ii) போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் சமூக பொருளாதார பாதிப்புகளைக் குறிப்பிட்டு, இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்கான உமது ஆலோசனைகளை முன்வைக்குக.**

**சமூக - பொருளாதாரப் பாதிப்புகள்**

- சமூகத்திற்கு பலம் சேர்க்கும் இளைஞர்கள் பலவீனப்படுவதனால், சமூகம் பலவீனமடையும்.
- திருமண உறவுகளில் சிக்கல் ஏற்படும்
- சந்ததி விருத்தியில் பாதிப்பு செலுத்தும்
- பரம்பரையைப் பாதிக்கும்.
- கல்வித் துறையில் பாதிப்புச் செலுத்தும்
- ஒழுக்கச் சீர்கேட்டுக்கு வழிவகுக்கும்.
- குடும்பக் கட்டமைப்பைத் தகர்க்கும்.
- சமூக ஐக்கியம் சீர்குலையும்
- குற்றச் செயல்கள் அதிகரிக்கும்
- வறுமை பீடிக்கும்
- தொழிலில் ஆர்வமின்மை ஏற்படும்
- தொழிற்துறையில் எதிர்பார்க்கப்படும் இலக்குகள் அடையப் பெறாமை

**இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்கான ஆலோசனைகள்**

- போதைப்பொருட்களின் தன்மைகள் அதன் பாதிப்புகள் சம்மந்தமாக பெற்றோருக்கு அறிவூட்டல்.
- பெற்றோர், பிள்ளைகளுக்கிடையிலான தொடர்பை பலப்படுத்தல்.
- போதைப் பொருளின் தீங்கைப் பற்றி பெற்றோர் பிள்ளைகளுக்கு தெளிவூட்டல்.
- நல்ல நண்பர்களைத் தெரிவுசெய்து கொடுத்தல்.
- தற்காலத்தில் பயன்பாட்டில் உள்ள போதைப் பொருளும் இஸ்லாத்தில் தடை செய்யப்பட்ட ஒன்று என்பதை பிள்ளைகளுக்கு தெளிவுபடுத்தல்.
- ஓய்வு நேரங்களை பயனுள்ள வகையில் களிப்பதற்கான ஏற்பாடுகளை பெற்றார் மேற்கொள்ளல்.
- இறைவனுடனான தொடர்பை பலப்படுத்தும் வகையில் தொழுகை, அல்குர்ஆன் ஓதுதல் போன்ற ஆன்மீக செயற்பாடுகளில் ஈடுபடத்தூண்டுதல்.
- இளைஞர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைப்பதோடு அவற்றுடன் மறுமையை தொடர்புபடுத்தல்.
- வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்கல்.
- ஆன்மீக அமர்வுகளில் இளைஞர்களை ஈடுபடுத்தல்
- இளைஞர்களை மையப்படுத்திய செயற்திட்டங்களை அமுல்படுத்தல். உதாரணமாக: மருத்துவ முகாம்கள், பாடசாலை மாணவர்களுக்கான கல்வி வட்டங்கள், விளையாட்டுப்போட்டிகள் போன்றவை.

**(இவைபோன்ற சமூக, பொருளாதார பாதிப்புக்கள் ஐந்தையும் ஆலோசனைகள் ஐந்தையும் முன்வைத்திருப்பின் 5 + 5 = 10 புள்ளிகள்)**

(10 x 10)
10 points போதும்
(விளக்கம் தேவையில்லை)

**8. பின்வருவன பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.**

(i) அல்குர்ஆன் சிறிது சிறிதாக அருளப்பட்டமைக்கான காரணங்கள்
- நபியின் உள்ளத்தை திடப்படுத்திட இறங்கியமை. (அல்புர்கான்: 32)
- அவற்றை மனனமிட்டுப் பாதுகாப்பதும், அதன் அடிப்படையில் செயலாற்றி அதன் கோட்பாடு களுக்குச் செயல் வடிவம் கொடுப்பதும்.
- சமுதாய வளர்ச்சிக்கட்டங்களுக்கேற்ப இறக்கப்பட்டமை.
- நபியவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் வழங்கும் முகமாக இறங்கியமை.
- அல்குர்ஆனை இலகுவாக விளங்கிக்கொள்வதற்காக இறங்கியமை.
- எழுதிப் பாதுகாக்கும் சந்தர்ப்பத்தை வழங்கும் நோக்கில் இறங்கியமை.
- சமூக சீர்திருத்தத்தை படிமுறையாக மேற்கொள்ள இறங்கியமை.

**(இவைபோன்ற ஐந்து கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 5 x 1 = 5 புள்ளிகள்)**

**(ii) இஸ்லாத்தில் கைத்தொழிலின் முக்கியத்துவம்**

- இஸ்லாம் அனுமதிக்கும் தொழில் முயற்சிகளில் கைத்தொழிலும் இடம்பெறுகின்றது.

**1. நபிமார்கள் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளமை**

- தாவூத் (அலை) அவர்கள் - இரும்பை பயன்படுத்தினார்கள். (அல்குர்ஆன் 34:10), (அல்குர்ஆன் 21:80)
- நூஹ் (அலை) கப்பல் கட்டும் நுணுக்கத்தை அறிந்திருந்தமை.
- ஸகரிய்யா (அலை) தச்சுத்தொழிலில் ஈடுபட்டமை.

**2. கைத்தொழிலை கற்றுக்கொடுப்பது ஸுன்னாவாகவும், இபாதத்தாகவும் ஆக்கப்பட்டுள்ளமை.**

"உங்களுக்கு தெரிந்த ஒரு கைத்தொழிலை கற்றுக்கொடுப்பது உங்களை நரகில் இருந்து பாதுகாக்கும்." (அல்ஹதீஸ்)

**3. கைத்தொழிலுக்கு அடிப்படையாக அமையும் இரும்பு பற்றி அல்குர்ஆன் குறிப்பிட்டுள்ளமை** (அல்குர்ஆன் 57:25)

4. இரும்பின் மூலம் இன்று பாரிய கைத்தொழில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றமை.

5. நபி (ஸல்) காலப்பிரிவில் சில ஸஹாபாக்கள் ஆயுதங்கள். நகைகள் செய்வதற்கான பட்டறைகளை வைத்திருந்தமை.

6. நபித்தோழியர்களும் கைத்தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றனர்.

நபி (ஸல்) அவர்களது மனைவியர்களுள் ஒருவரான ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழி) வலை பின்னி வாழ்க்கை நடாத்தியமை.

**(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 5 x 1 = 5 புள்ளிகள்)**

Downloaded from 'Past Papers Wiki' - Web: www.pastpapers.wiki

**(iii) இலங்கையில் இஸ்லாத்தின் அறிமுகம்**

- இலங்கையில் இஸ்லாம் எப்போது அறிமுகமானது என்பது பற்றி பல கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. அக்கருத்துக்களையும் அதற்கான ஆதாரங்களையும் நாம் பின்வருமாறு நோக்கலாம்.

1. நபி (ஸல்) காலத்தில் இஸ்லாம் இலங்கையில் அறிமுகமாகியது :
   ஸஹாபி வஹுப் இப்னு அபீ ஹப்ஸா (ரழி) மூலம் நபி (ஸல்) காலத்தில் இஸ்லாம் இலங்கையில் அறிமுகமாதல்

2. கலீபா உமர் (ரழி) இன் காலத்தில் இஸ்லாம் இலங்கையில் அறிமுகமாகியது
   இப்னு ஷஹ்ரயாரின் சான்று : மன்னன் மூன்றாம் அக்ரபோதி காலத்தில் நபி பற்றிய செய்தியை அறிந்து வர ஒரு தூதரை அனுப்பிய நிகழ்வு.

3. உமையா காலத்தில் இஸ்லாம் இலங்கையில் அறிமுகமாகியது
   - 'ஜேம்ஸ் டெனன்ட்' இன் கருத்துப்படி, உமையாக்களின் காலத்தில் இஸ்லாம் பனூ ஹாஷிம்களின் வருகையோடு அறிமுகமாகியதாக குறிப்பிடுகின்றது. இதற்கு இரு சான்றுகள் முன்வைக்கப்படுகின்றன.
   - வரலாற்றாசிரியர் அல் பலதூரியின் கருத்தின் படி, 8ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையை ஆண்ட மன்னனான மாணவம்மன் (கி.பி. 684-719) இலங்கையில் காலஞ்சென்ற அறேபிய வர்த்தகர்கள் சிலரின் விதவைகளையும், பெண் மக்களையும் அறேபியாவுக்கு அனுப்பிய நிகழ்வு.

**(மேலுள்ள விடயங்களுடன் தொடர்புபடுத்தி ~~ஐந்து கருத்~~துக்கள் எழுதப்பட்டிருப்பின் 1 x 5 = 5 புள்ளிகள்)**

**(iv) ஹஜ்ஜின் லௌகீகப் பயன்கள்**


- ஹஜ் உலகளாவிய முஸ்லிம் உம்மத்தில் தானும் ஒருவன் என்ற உணர்வை ஏற்படுத்துகின்றது.
- சகோதரத்துவ உணர்வை வளர்க்கின்றது.
- முஸ்லிம்களது தனித்துவத்தை வெளிப்படுத்திக் காட்டுகின்றது.
- கூட்டு வாழ்க்கைப் பயிற்சி, மனப்பக்குவத்தை வழங்குகின்றது.
- பிரயாண அனுபவம், வாழ்க்கையில் சிரமங்களை சகித்துக் கொள்ளும் மனப்பக்குவம் ஏற்படுகின்றது.
- மனித நேயம் வளர்க்கப்படுகின்றது.
- சர்வதேச சமாதானத்திற்கு வித்திடுகின்றது.
- முஸ்லிம் உம்மத்தின் சர்வதேச மாநாடாக ஹஜ் அமைகின்றமை.
- பரஸ்பர விட்டுக்கொடுப்புடன் வாழ்வதற்கான பயிற்சியாக அமைகின்றது.

**(இவை போன்ற ஐந்து இலௌகீகப் பயன்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 5 x 1 = 5 புள்ளிகள்)**

(5+5+5+5)


Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!




CONTACT NO :
WWW.PastPapers.WiKi
WTS NO : 0714480832 / 0773300832
Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!